DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Procedure)
THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender Case No. : C.C.438/2019

Deposition of Witness for Prosecution : P.W. 2 (L.W. 6 )

Name : Suji

Father's Name : Edilson(late)

Village : Thuckalay

Taluk : Kalkulam

Calling : Doctor

Religion : Christian

Age : 29

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2022.

**முதல் விசாரணை** -

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவகல்லுரி மருத்துவமனையில் நெஞ்சக நோய் பிரிவில் உதவிபேராசிரியராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 22.01.2019 ம் தேதி பத்மநாபபுரம் அரசு மருதததுவமனையில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் 22.01.2019 சுமார் இரவு 09.00 மணி அளவில் பூவன்விளையை சேர்ந்த கிஷோர் விமல் ராஜ் என்பவரை அவரது அப்பா ராஜ் என்பவர் சிகிடசைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரிதது பரிசோதனை செய்தேன். கிஷோர் விமல் ராஜ் என்பவரை 22.01.2019 ம் தேதி மாலை 04.30 மணிஅளவில் முண்டவிளை அருகில் இரண்டு நபர்களால் பைப்பால் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை மருத்துவ சிகிட்சைக்காக அனுமதிக்கப்ப்ட்டார். அவரை பரிசோதனை செய்ததில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. சிராய்ப்பு காயம் அவரது வாய்க்குள் 0.25x0.25cm அளவில் காயம் காணப்பட்டது, 2. வலது பாதத்தில் சிராய்ப்பு காயம் 2x0.25cm அளவில் காயம் காணப்பட்டது. 3. வலது பாதத்தில் சிதைவு காயம் 2x0.25x0.25cm அளவில் காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிட்சை செய்ப்பட்ட உள்நோயாளி பிரிவில் 22.01.2019 முதல் 24.01.2019 வரை சிகிட்சைஅளிக்கப்பட்டது. காயங்களின் அடிப்படையில் மருத்துவ சிகிட்சையின் அடிப்படையிலும் அவருக்கு ஏற்பட்ட காயமமானது சாதாரண காயம் என்று சான்று வழங்கப்பட்டது. இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் விபத்து பதிவேட்டுநகலுடன் கூடிய காயச்சான்று நான்அளித்ததுதான். அந்த காயச்சான்று அ.சா.ஆ.2 ஆகும். வழக்கு சம்பநதமாக போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

காயம்பட்ட நபர் கிஷோர் விமல் ராஜ் என்பவரை கல்வைத்து தாக்கியதாக என்னிடம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபரை பின்தலையில் தாக்கியதாக என்னிடம் குறிப்பிட்டுகூறவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் பெருவிரலில் காயம்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எந்த தேதி, எந்த நேரத்தில் தகவல் தெரிவிக்கப்ட்டது என்ற விவரம் காயச்சான்றில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரம் குறித்துதனியாக குறித்து வைப்போம். மேற்படி தேதி, நேரம் குறித்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. காயம்பட்ட நபர் பைக்கில் இருந்து தவறி விழும்போது கூட சிராய்ப்பு காயங்க்ள ஏற்பட வாய்ப்புள்ளதுஎன்றால் சரிதான். போலீசார் என்னை சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள்.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக என்னால் எழுதப்பட்டு/
தட்டெழுத்தில் பொறிக்கப்பட்டு எதிரியின் முன்னால்
படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்
கொள்ளப்பட்டது. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம்
முழுமையானதும், உண்மையானதும் அவரால் சொல்லப்பட்டதுமாகும்.

குற்றவியல் நடுவர் எண் I,
பத்மனாபபுரம்.